1

தப்லீக் ஒரு உண்மை விளக்கம்

உலகெங்கும் நடைபெற்று வரும் தப்லீக்ஜமாஅத்தின் இடைவிடாத பணிகளின் காரணமாக மேல்நாடுகளிலும், கீழ்நாடுகளிலும் பூட்டிக்கிடந்த பல பள்ளிவாசல்கள் திறக்கப்பட்டும், மேலும் பல புதிய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டும் வருகின்ற சம்பவங்களை கண்கூடாக கண்டும், கேள்விப்பட்டும் வருகிறோம். தவிரவும் தீனுல் இஸ்லாத்தைப்பற்றிய அடிப்படை அறவே தெரியாமல் தங்கள் காலத்தை வீணாக கழித்துவிட்ட ஏராளமான இளைஞர்கள் உட்பட பெரியோர்கள் வரை தப்லீக்கின் சேவையால் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தின் அடிப்படை கடமையான தொழுகை உட்பட ஏனைய வணக்கங்கள் அனைத்தையும் தவறாமல் கடைபிடித்து வருவதுடன் தஹஜ்ஜத் போன்ற வணக்கங்களை கூட பற்றிப்பிடித்துவரும் செய்திகளையும் பரவலாக அறிந்து வருகிறோம். இந்த தப்லீக்ஜமாஅத்தினரின் அயராத பணியின் காரணமாக ஏற்பட்டு வரும் வேகமான மாற்றத்தையும், விளிப்புணர்ச்சியையும் எதிரிகளும் கூட மறுக்க முடியாத அளவுக்கு இந்த இயக்கத்தின் பயன்மிக்க பணி உலகை ஈர்த்துவருகிறது. "அல்ஹம்துலில்லாஹ்"

இப்படிப்பட்ட இந்த தப்லீக்இயக்கத்தை சில வருடங்களுக்கு முன் நமது ஊரைச்சேர்ந்த 11 ஆலிம்கள்! கையெழுத்திட்டு இவர்களை "காபிர்கள்" என்றும், இவர்களை "காபிர்"என்று சொல்லத்தயங்குபவர்களும் கூட "காபிர்கள்" என்றும் "பத்வா" ஒன்றினை வெளியிட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். "நவூதுபில்லாஹிமின்ஹா" இப்போதும்கூட இவர்கள் இதே மாதிரியான பிரச்சாரத்தை செய்து வருவதோடு தப்லீக் காரர்கள் பள்ளிவாசல்களை எல்லாம் நஜீஸ் ஆக்கி வருகிறார்கள் என்றெல்லாம் பிதற்றி வருகிறார்கள். தங்களின் பித்தலாட்ட பிரச்சாரத்திற்கு துணையாக இவர்கள் பிரிட்டிஷ்காரனின் கைக்கூலிகளாகப் பயன்பட்ட சில பரேலவி ஷெய்த்தான்களின் பொய்யும், புரட்டும் நிரம்பிய உருது நூல்களை ஆதாரமாக எடுத்துக்கொண்டு மக்களை ஏமாற்றி வழி கெடுக்க முனையும் கேவலமான முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறார்கள். அவர்களுக்கு கீழ்க்கண்ட இறைவசனத்தை பதிலடியாக தருகிறோம்.

இவர்கள் தங்கள் வாய்களைக் கொண்டே (ஊதி) அல்லாஹ்வுடைய பிரகாசத்தை அணைத்துவிட விரும்புகின்றனர். எனினும், இந்நிராகரிப்போர் வெறுத்த போதிலும் அல்லாஹ் (ஜல்) தன்னுடைய பிரகாசத்தைப் பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்கப்போவதில்லை. (அல்குர்ஆன் 9:32),

இஸ்லாமிய பெருமக்களே! "குப்ர்" பத்வா வெளியிட்ட இவர்கள் யாரையெல்லாம் "காபிர்" என்கிறார்கள். 1954-ம் ஆண்டு டில்லி தப்லீக்மர்கஸிலிருந்து ரஹ்மதுல்லாமௌலானா அவர்கள் நமது ஊருக்கு வருகை தந்து முக்கிய உலாமாக்களை கலந்தாலோசித்து நமது ஊரின் தப்லீக் அமீராக மர்ஹூம் நஹ்வி முஹம்மத் இஸ்மாயில் லெப்பை ஆலிம் அவர்களை நியமித்ததும், காதிரியாக கொடிமர சிறுநெய்னார் பள்ளியை நமதூரின் தப்லீக் மர்கஸாக ஏற்படுத்தப்பட்டு, அங்கு தப்லீக் பணிகள் நடைபெற்றதும், அதன்பின் 01-10-1954ல் மஜ்லிஸுல் புகாரி ஷரீபில் "தப்லீக் முதல் ஆண்டு பூர்த்தி விழா" நடைபெற்றதும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளும்படி "தப்லீக்மர்கஸான" கொடிமர சிறுநெய்னார் பள்ளியில் இருந்து விடுக்கப்பட்ட நோட்டீஸின் நகல் பிரதியையும் இதன் அடியில் அப்படியே கொடுத்துள்ளோம். இதைப்படித்துப் பார்த்தபின் "குப்ர் பத்வா" கொடுத்தவர்களைப் பற்றி நீங்களே ஒரு முடிவிற்கு வாருங்கள்.

ஆக, நோட்டீஸில் கண்டுள்ள நமது ஊரில் பெருமதிப்புமிக்கவர்களாகத் திகழ்ந்த இந்த உலமாக்களைப் பற்றியெல்லாம் "பத்வா" வெளியிட்ட இந்த மேதாவிகள் என்ன கருதுகிறார்கள்?. மர்ஹூம்அல்லாமா நஹ்வி முஹம்மது இஸ்மாயில் லெப்பை ஆலிம் அவர்கள், மர்ஹூம் மூஸா சாஹிப் ஆலிம் அவர்கள், ஆகிய பெரியோர்கள், தங்கள் வாழ்நாளின் இறுதிவரை தப்லீக் ஜமாஅத்தையோ, அதன் ஸ்தாபகர்களையோ, தப்லீகின் பணிகளையோ, குறை பேசியோ, அல்லது தப்லீகிற்கு எதிராக பத்வா வெளியிடவோ இல்லையென்பதுடன், இந்த பெரியோகள் எல்லாம் இறுதிவரை தப்லீகில் ஈடுபட்டு உழைத்து

வந்துள்ளார்கள் என்பதற்கு இந்த நோட்டீஸ் தக்க சான்றாகும். 1954ம் ஆண்டு நமது ஊரில் துவக்கப்பட்ட அதே டெல்லி தப்லீக்தான் எவ்வித மாற்றமும் இன்றி இன்றுவரை நடைபெற்றுவருகிறது.

ஆகவே, இந்த தப்லீக் இயக்கத்திற்கு எதிராக "குப்ர்" பத்வா வழங்கியவர்களுக்கும். இன்று வரை தப்லீகிற்கு எதிராக பொய்ப்பிரச்சாரம் செய்து வருபவர்களுக்கும் பின்வரும் இறைவசனத்தை பதிலாகத் தருகிறோம்.

"நட்சத்திரங்களின் பாதைகளுடைய வானத்தின் மீது சத்தியமாக, நீங்கள் (சத்தியத்தில்) மாறுபட்டு பேசுகின்றீர்கள். (ஏற்கனவே, அல்லாஹ் ரஸுல் உடைய கற்பனையின் பிரகாரம்) திருப்பப்பட்டவனே சத்தியத்தை விட்டும் திருப்பப்படுவான். பொய் சொல்வோர் அழிந்தே போவர். அவர்கள் (தங்கள்) மடமையால் (மறுமையையே) மறந்து விட்டனர்". (அல்குர்ஆன் 51:7-11)

1954 முதல் இன்றுவரை நீங்கள் தப்லீக் ஜமாஅத்தினர்களுக்கு செய்துவைக்கும் நிகாஹின் நிலைக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? நபிமார்களின் வாரிசுகளாகிய உலமாக்களே தீர்ப்பளிப்பீர்களாக!

இவண்,
இஸ்லாமிய இளைஞர் அணிகள்
காயல்பட்டணம்.

தப்லீக் முதல் மஹாநாடு
(இஜ்திமா)

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும்

அல்லாஹ் உதவியால் நமதூர் தப்லீக் ஜமாஅத்தின் திட்டப்படி நமதூரிலுள்ள பள்ளிகளில் வாரம் ஒரு பள்ளியாக பிரதி வெள்ளிக்கிழமைகளிலுஞ் சென்று அந்தந்த மஹல்லாக்களில் மாலையில் கஷ்து செய்தும், குறிப்பிட்ட பள்ளியில் மக்ரிபுக்குப் பிறகு உலமாக்களால் உபன்னியாசம் நடத்தியும், இஷாவுக்குப்பின் (இ.ஃதிகாப்) பள்ளியில் தரித்தும், சுபுஹுதொழுகைக்கு அழைத்தும் சுபுஹுதொழுதபின் தஅலீம் ஹல்கா நடத்தியும் வந்தோமென்பதறிந்த விஷயம், சென்ற வாரத்துடன் எல்லாப் பள்ளிகளுக்கும் சென்று முடிவடைந்துவிட்டதால் தப்லீக் ஜமாஅத்தின் முதல் பூர்த்திவிழாவை இன்ஷா அல்லாஹ் 01-10-54 வெள்ளிக்கிழமை பின்னேரம் சனிக்கிழமை மக்ரிபுக்கு பிறகு நமதூர் தப்லீக் ஜமாஅத்தின் அமீர்.

மௌலானா மௌலவி அல்ஹாஜ்
நஹ்வி முஹம்மதிஸ்மாயீல் லெப்பை ஆலிம் முப்தி அவர்கள் தலைமையின் கீழ்
குருவித்துறைப் பள்ளியில் நடத்துவதென நிச்சயித்துள்ளோம். ஆனால், பள்ளியின் இடவசதி குறைவின் நிமித்தம் நமது அமீர் அவர்களின் உத்தரவுப்படி மஜ்லிஸுல் புகாரிஷ்ஷரீபு தைக்காவில் மேற்படி இஜ்திமா நடைபெறும். அனைவரும் தவறாது திரண்டு வந்து உபதேசங்களை செவியுற்று நற்பயனடைய விரும்புகிறோம்.
மர்கஸ்: காதிரிய்யா கொடிமர சிறுநெய்னார் பள்ளி

தப்லீக் ஜமாஅத்தார்
காயல்பட்டணம்

<u>நிகழ்ச்சி நிரல்</u>

ஆரம்பம் மாலை 6-45 மணி முதல்

ஹாபிஸ் **M.S.M.** அப்துல்லா சாஹிபு ஆலிம் அவர்கள் (கிராத்)

6-55 தலைவரவா்களின் முகவுரை (கலிமா விளக்கம்)

7-20 மௌலவி மு.க செய்திபுறாகீம் சாகிபு ஆலிம் அவா்கள் (தொழுகை)

7-45 மௌலவி சா. சாகுல் ஹமீது ஆலிம் அவா்கள் (கல்வியும், தியானமும்)

8-10 மௌலவி **M.K.A.** மூஸா ஆலிம் சாஹிபு அவா்கள்(முஸ்லீமுக்கு மரியாதை)

8-35 மௌலவி செ.வா. சாகுல் ஹமீது ஆலிம் அவா்கள் (பரிசுத்த எண்ணம்)

9-00 மௌலவி அபுல்ஹசன் ஷாலிது சாஹிபு (பாஜில் பாக்கவி) அவா்கள், தென்காசி (அல்லாஹ்வுக்காக நேரம் ஒதுக்கல்)

9-25 மௌலவி அ.ச. முகும்மது லெப்பை ஆலிம் அவா்கள் (அவசியமற்றதை விடுதல்)

9-50 மௌலவி S.S.E. காழி அலாவுத்தீன் ஆலிம் அவா்கள் (அறிக்கை வாசித்தல்)

10-00 மௌலவி சே.கு.மு. நூஹுதம்பி ஆலிம் அவா்கள் (பாத்திஹா-துஆ)